# ரிதீகம பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 22 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, ரிதீகம பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரிதீகம பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழங்கல் கடன்கொடுத்தோர் மீதிக்குரிய பட்டோலையின் பிரகாரம் ரூபா 7,408,244 தொகையாக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 4,802,316 தொகையாக கொண்டுவரப்பட்டமையினால் மீளாய்வாண்டின்

இறுதியில் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,605,928 தொகை குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 16,276,468 தொகையான சம்பள மீளளிப்பு கணக்கு வைப்பதற்குப் பதிலாக ஆண்டின் போது கிடைத்த ரூபா 13,509,920 தொகை மாத்திரம் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் சம்பள மீளளிப்பு ரூபா 2,766,548 தொகை குறைத்து கணக்கு வைகக்கப்பட்டிருந்தது.

(இ) 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிராததுடன் கணக்கு வைக்கப்பட்ட ரூபா 8,014,615 தொகை 2011 ஆம் ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 7,995,070 தொகையானது 2009 ஆம் ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 19,545 தொகையினையும் உள்ளடக்கியிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,106,177 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,226,750 ஆக இருந்தது

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,834 | 1,039 | 2,676 |
| (ii) | வாடகை | 1,682 | 1,376 | 583 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 970 | 973 | 768 |
| (iv) | ஏனைய வருமானம் | 11,515 | 1,700 | 9,815 |

### 2.2.2 ஆதனவரி

புதிய மதிப்பிடப்பட்ட மீளாய்வாண்டிற்குரிய ஆதன வரி பற்றுச்சீட்டிடல்கள் ரூபா 1,535,480 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆதனவரி நிலுவை ரூபா 2,414,394 தொகையான பற்றுச்சீட்டிடலின் அடிப்படையில் 157 சதவீதமாக இருந்தது. அந்த நிலுவை வரியை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபை [நிதி மற்றும் நிர்வாகம்] விதிக் கோவையின் விதி இல. 31 – 42 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகை

ரீதிகம பொதுச் சந்தையில் 3 கடைகளில் ரூபா 23,115 தொகையான நிலுவை வாடகையும் 2005 ஆம் ஆண்டின் போது உடைத்தகற்றப்பட்ட 11 கடைகளுக்குரிய ரூபா 42,000 தொகையான நிலுவை வாடகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாது காணப்பட்டது. அவ்வாறே மாதாந்தம் ரூபா 200 படி வாடகை அறவிடப்படுகின்ற ரீதிகம பொதுச் சந்தையில் 20 ஆம் இலக்க கடையின் தவணைப்

பணம் செலுத்தாமையின் அடிப்படையில் 2012 ஏப்ரல் 10 ஆந் திகதி முத்திரையிடப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 14,300 தொகையான வாடகைப் பணம் மற்றும் ஹேவாவிஸ்ஸ உப அலுவலகத்திற்குரிய 2010 ஆம் ஆண்டு தொடக்கம் கொண்டு வரப்படுகின்ற ரூபா 25,099 தொகையான நிலுவை வாடகை மீதியும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 விற்பனை வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்**

(அ) 2004 – 2006 காலப்பகுதிக்குரிய நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 845,750 தொகை, 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 150(4) மற்றும் 152(4) பிரிவுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் கீழ் காணப்பட்ட ரூபா 658,325 தொகையும் கால ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக தற்போது வரையிலும் அறவீடு செய்தல் பிரச்சனைகளுக்குரியதாகக் காணப்பட்டது.

**2.2.5 தொலைபேசி பரிவர்த்தனைக் கோபுரங்களுக்கான செயன்முறைக் கட்டணம்**

சபையினால் பேணப்பட்ட பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 18 தொலைப் பேசிப்பரிவர்த்தனை கோபுரங்கள் காணப்பட்டமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் செயன்முறைக் கட்டணமாக ஒரு கோபுரத்திற்கு ரூபா 229,760 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் 7 கோபுரங்களுக்காக ரூபா 3,000 படி வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

**2.3 வரி தேவைப்பாடுகளுக்கு இணங்காமை**

கழிவப் பொருள் முகாமைத்துவ நிலையத்தை நிர்மாணிப்பதற்கான உரிய ஒப்பந்தக் காரர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 4,113,817 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பெறுமதிசேர் வரித் தொகையான ரூபா 440,776 தொகையானது சபையினால் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி கணிப்பீடு செய்யும் போது உள்ளடக்கப்பட்டதாக எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

(அ) சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 500,000 பெறுமதியான 2 கை உழவு இயந்திரங்கள் 10 வருட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக முறையான பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாக 2012 நவம்பர் 8 ஆந் திகதி தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளூராட்சித் திணைக்களத்தின் மாகாண குறித்த மானியத்தின் கீழ் மினிரன்கம நீர் உத்தேசத் திட்டத்தை கொள்வனவு செய்து ரூபா 2,500,191 பெறுமதியான பொருட்கள் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

சுபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 65 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 50 ஆக இருந்தது. அதனுள் அங்கீகரிக்கப்பட்ட 3 தொழில்நுட்ப உத்தயோகத்தர் பதவிகளில் 2 பதவியும், 3 வருமான கட்டுப்பாட்டாளர் பதவிகளில் 2 பதவியும், 3 நூலகர் பதவிகளில் 2 பதவியும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 2.6 செயற்பாட்டு / முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 2,909,925 ஆக இருந்தது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்வதன் அடிப்படையில் அறவிட வேண்டிய 1 சதவீத வரியின் கீழ் 1997 ஆம் ஆண்டில் கூறிடல் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பத்தினிகொல்ல வத்த என்ற பெயருடைய காணியில் கிடைக்க வேண்டிய ரூபா 20,000 தொகையும், 1998 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் கூறிடல் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட 2 காணிகளுக்கான பொது வசதிகளுக்காக சபைக்குக் கிடைக்க வேண்டிய 275 பேர்ச்சஸ்

அளவிலான 7 காணிக் கூறுகளுக்குரிய உரித்துறுதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. பொது வசதிகளுக்காக சபையினால் கையேற்கப்பட்ட 75 பேர்ச்சஸ் அளவிலான இரண்டு காணிக் கூறுகளில் அனுமதியற்ற நிர்மாணங்களுடன் சிலர் வசித்து வருகின்றமையும் வெளிப்படுத்தப்பட்டது.

(இ) சபைக்குச் சொந்தமான ரூபா 37,769,444 பெறுமதியான காணியும் கட்டமும் காணப்பட்ட போதிலும் அது தொடர்பான 1988 இன் பிரதேச சபையின் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் விதி இலக்கம் 218 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் காணி மற்றும் கட்டங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குரிய ஹேவாவிஸ்ஸ மற்றும் தொடம்கஸ்லந்த பொது நூலகங்களில் (2005 ஆம் ஆண்டு தொடக்கம்) கொண்டுவரப்படுகின்ற ரூபா 21,582 பெறுமதியான 25 புத்தகங்கள் மற்றும் ரூபா 64,372 பெறுமதியான 80 புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

ரூபா 4,113,817 தொகை செலவிடப்பட்டு 2012 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட பிளிசறு செயற்திட்டத்தின் கூட்டுப்பசளை உற்பத்தி செயற்பாடுகள் 2012 திசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் தொழிலாளர் பிணக்குகளின் காரணமாக இந்த செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகள் அக்காலப்பகுதியின் போதே இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக 25 எக்கர் அளவிலான வெற்றுக் காணி ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## 2.8 செயலாற்றல்

(அ) ரூபா 1,223,675 தொகை செலவில் 16 கிலோமீற்றர் அளவான வீதி பராமரிக்கப்பட்டிருந்ததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட 55 மயான நிலங்களின் பராமரிப்புக்கள் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வடிகால் முறைமை

மற்றும் சிறுவர் பூங்கா தொடர்பான இனங்காணல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 5 நலன்புரிச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 415,000 தொனையானது உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) மனித வள முகாமைத்துவம்